සුබසාධක ප්‍රතිලාභ මණ්ඩලය
நலன்புரி நன்மைகள் சபை
**WELFARE BENEFITS BOARD**
මුදල්, ආර්ථික සංවර්ධන, ප්‍රතිපත්ති සම්පාදන, සැලසුම් සහ සංචාරක අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு
**MINISTRY OF FINANCE, ECONOMIC DEVELOPMENT, POLICY FORMULATION, PLANNING AND TOURISM**
ජේ.ආර්. ජයවර්ධන මධ්‍යස්ථානය, අංක.191, ධර්මපාල මාවත, කොළඹ 07 | ஜே ஆர் ஜெயவர்தன மையம், 191, தர்மபால மாவத்தை, கொழும்பு 7
J.R. Jayewardene Center, No.191, Dharmapala Mawatha, Colombo 07

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No. | WBB/Notice/D/Div/2024 | ඔබගේ අංකය<br>உனது இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2024.11.18. |

Circular No - 25/2024

அனைத்து பிரதேச செயலாளர்கள் / பிரதி நலன்புரி நன்மைகள் ஆணையாளர்களுக்கு,

**<u>அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தின் கீழ் முதலாம் கட்டடத்தின் பயனாளின் தெரிவின்போது பாதிக்கப்பட்டவர்களுக்கு குறைகளை முன்வைக்க சந்தர்ப்பம் வழங்குதல்</u>**

MASTER

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் திட்டத்தின் கீழ், முதலாம் கட்டத்தின் விண்ணப்பங்கள் கோரப்பட்டு , பயனாளிகளின் முதற்கட்டத் தெரிவின் பின்னர், மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளை முன்வைப்பதற்கு குறிப்பிட்ட கால அவகாசம் வழங்கப்பட்டது. அதன்படி, மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மேல்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளைத் தவிர, மற்ற அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதன்படி தகுதி பெற்ற 18 இலட்சம் அளவிலான குடும்பங்களில் கிட்டத்தட்ட 17 இலட்சம் வரையிலான குடும்பங்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுத் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீதியாகவுள்ள 100,000 வரையிலான குடும்பங்களின் நன்மைக் கொடுப்பனவுகளை வழங்கிவைப்பதற்கு தற்போது முடியாது காணப்படும் பல்வேறு பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

இக் கொடுப்பனவுகளுக்கான தெரிவுச் செயற்பாட்டில் தமக்கு பாதகம் நிகழ்ந்ததாகக் கருதும் நபர்களால் இச் சபைக்கும் பிரதேச செயலகங்களுக்கும் தொடர்ச்சியாக குறைகள் சமர்பிக்கப்பட்டுவருகின்றன. தற்போது அத்தகைய குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஒரு குறை தீர்க்கும் பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் குறைகளை முன்வைக்க விசேட சந்தர்ப்பம் வழங்கப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளை வழங்குவதற்கு விசேடமானதொரு திட்டத்தைச் செயற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

எனவே, இதுபோன்ற குறைகளைச் சமர்பிப்பதற்கான கால அவகாசம் 25.11.2024 ஆம் திகதி முதல் 15.12.2024 ஆம் திகதி வரை என அறிவிக்கப்பட்டுள்ளது. இக் கால அவகாசத்தினுள், முதலாம் கட்டத்திற்கு விண்ணப்பித்திருந்த விண்ணப்பதாரர்களின் குறைகளை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தின்படி பூர்த்தி செய்து அனுப்பிவைக்கவேண்டும். அதன்படி, இந்தப் படிவத்தின் தேவையான பிரதிகளை அச்சிட்டு, அவசியப்படும் நபர்களுக்கு பொருத்தமான முறையின் கீழ் வழங்கிவைத்து, பூர்த்தி செய்யப்பட்ட இவ் விண்ணப்பங்களை உரிய காலத்திற்குள் ஏற்றுக்கொண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்..

பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க்காணும் முறையில் வகைப்படுத்தி, பின்னர் அவற்றை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் படி வகைப்படுத்தி தனித்தனியாக கோப்புகளில் இட்டு வைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



Scanned with CamScanner

குறைகளின் விடயரீதியான வகைப்பாடு –

I. விண்ணப்பங்களைக் கோரியத்தில் பாரபட்சம் / அதிருப்தி காணப்படுதல்
II. வீடுகளுக்குச் சென்று தகவல்களைச் சேகரிக்கும் போது பாரபட்சம் / அதிருப்தி காணப்படுதல்
III. தெரிவுச் செயன்முறை தொடர்பில் பாரபட்சம் / அதிருப்தி காணப்படுதல்
IV. வேறு விடயங்களில் பாரபட்சம்/ அதிருப்தி காணப்படுதல்

இந்த விண்ணப்பங்கள் கோருவது குறித்து, நலன்புரி நன்மைகள் சபை மூலம் தேசிய ஊடகங்கள் ஊடாக பரவலாக விளம்பரம் செய்யவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதுடன், பிரதேச செயலக ரீதியாக விளம்பரம் செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அவசியமானவர்களுக்கு, முதலாம் கட்டத்திற்கான அவரது விண்ணப்பத்துடன் எண்ணீட்டின்போது அவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களை *IWMS* முறைமையில் சரிபார்த்துக்கொள்ள முடியும். அதற்காக, அவரது தேசிய அடையாள இலக்கம் அல்லது *HH* குறியீட்டினை உள்ளிட்டு, தேவைப்படும்போது அந்தத் தகவலை எவ்வாறு பார்வையிடுவது என்பதை அவருக்குத் தெளிவுபடுத்தல் வேண்டும். விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் போது, விண்ணப்பத்தின் கடைசிப் பகுதியை பூர்த்தி செய்து விண்ணப்பதாரருக்கு பெற்றுக்கொண்டதன் அடையாளமாக வழங்கிவைப்பதற்கும், விண்ணப்பப்பத்திரங்களை கோப்புகளில் இட்டுப் பராமரிப்பதற்கும் *WIUB* உத்தியோகத்தர்களுக்கு இதன்மூலம் தெரிவிக்க விரும்புகிறேன்.

அவ்வாறு பெறப்பட்ட மனக்குறை விண்ணப்பங்கள் தொடர்பாக மேல் நடவடிக்கை எடுப்பது குறித்து அறிவுறுத்தல்கள் பின்னர் வழங்கப்படும்.

இவ் விடயம் தொடர்பாக தங்கள் மூலம் வழங்கப்படும் ஆதரவினைப் பெரிதும் மதிக்கின்றேன்.

MASTER

ஒப்பம் :-

ஜயந்த விஜேரத்ன

தலைவர்/ஆணையாளர்

சீனிவாசன் கிரிதரன்

மேலதிக ஆணையாளர் (ஒருங்கிணைப்பு)

பிரதிகள் : 01. சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி செயலகம்.

02. செயலாளர், நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு.

03. செயலாளர், நீதி, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழிலாளர் அமைச்சு.

04. அனைத்து மாவட்ட செயலாளர்கள்/மேலதிக நலன்புரி நன்மைகள் ஆணையாளர் :-
தேவையான ஒருங்கிணைப்பு
மற்றும் செயற்பாடுகளுக்குக்காக.

කාර්යාලය அலுவலகம் } Tel: 009411- 2151481 009411- 2484600/4117 විද්‍යුත් තැපැල මின்னஞ்சல் } welfarebenefitboard2016@gmail.com වෙබ් අඩවිය இணையதளம் } www.wbb.go

Scanned with CamScanner